# இசைக் கலைஞர் தாமோதரம்பிள்ளை

**கடந்த மாதம் 18ம் திகதி, தனது 66ம் அகவையில் உயிர் நீத்த திருக்கோணமலையின் இசைக் கலைஞர் தாமோதரம்பிள்ளை பத்மநாதன் அவர்களது மறைவையொட்டிய நினைவேந்தல்.**

ஆழத்து முத்துக்கள் 169

- ஆனந்தப்ரசாத் -

## தென்றலும் புயலும்

"தம்பி பிரசாத்... இன்னையில இருந்து நான் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முகவர். என்னிடம் காப்புறுதி செய்து கொள்கிறீர்களா? முதல் முதலாக உங்களைத்தான் நான் கேட்கிறேன்... என்ன சொல்கிறீர்கள்?"

"சரி அண்ணை... நான் என்ன செய்யவேணும்?"

"நான் விளங்கப்படுத்துகிறேன்... வாரும். உள்ள போவோம்"

இலக்கம் 71,பிரதான வீதி... திருக்கோணமலை. பல வருடங்களாக எனது நண்பன் நவனீதநாதனை தினமும் சந்திக்கப்போகும் காலை வேளைகளில் அவனது மூத்த அண்ணன் பத்மநாதன் எப்போதும் என்னை எதிர்கொள்வார். அவருடன் பேசிவிட்டுத் தான் நண்பனோடு வெளியே செல்வோம்! அன்றும், அதன்பிறகும் அவன் இல்லை. காப்புறுதியின் அத்தியாவசியங்களை அண்ணன் எனக்கு உபதேசித்தார். புரிந்ததோ, புரியவில்லையோ ஒத்துக்கொண்டேன். இவ்வளவு பெரிய இசையமைப்பாளர், ஞானஸ்தர் கேட்கும் போது மறுப்பே மறுத்துவிட்டது. நான்தான் அவரது முதலாவது 'கிராக்கி'... அல்லது 'போனி'! அந்த ராசியோ என்னவோ அண்ணன் பல விருதுகளைப் பெற்றுக்கொண்டார். அந்தத் துறையிலும் பின்னாளில் பிரகாசித்தார்.

குலாம் காதருக்கும், கோகுலாஷ்டமிக்கும்... போல காப்புறுதிக்கும், கர்னாடக சங்கீதத்திற்கும் என்ன முடிச்சு? இரண்டுமே ஆரோக்கியமான ஸ்வாசத்திற்கு உத்தரவாதம் என்பதைத் தவிர!

ஐம்பதுகளில் திருக்கோணமலையில் இசை பயிற்றுவித்த ஒரேயொரு ஆசான் மதிப்பிற்குரிய வே. தில்லையம்பலம் அவர்கள். 1941ம் ஆண்டு பங்குனி மாதம் 15ம் திகதியில் பிறந்த பத்மநாதன் அண்ணன் அவரிடம் முறைப்படி கர்னாடக சங்கீதம் பயின்றுகொண்டிருந்தார். தந்தை தாமோதரம்பிள்ளை 'கல்வியே கருந்தனம்' என்று திருக்கோணமலை ஸ்ரீ சண்முக வித்யாலயத்திலும்... பின்னர் ஸ்ரீ கோணேச்வரா வித்யாலயத்திலும் கல்வி பயின்று கொண்டிருந்தவரை, பதினாறு வயதில் யாழ்ப்பாணம் புனித. சம்பத்திரிசியார் கல்லூரியின் மாணவர் விடுதியில் தங்கி உயர் கல்வியைத் தொடர அனுப்பிவைக்கப்பட்டார்.

மீண்டும் திருக்கோணமலை திரும்பிய இவரை ஆகர்ஷித்தவர் ஆர்த்தர் ஸாம் ஸன் என்கிற ஆங்கிலோ இந்திய இசைக் கலைஞர். இவரிடம் இசைவு படாத வாத்தியங்கள் மிகக் குறைவு! அன்னாரிடம் 'அக்கோர்டியன்' பயின்றார். மேற்கத்திய இசைக்குறிப்பை எழுதவும் பயின்று தேர்ந்தார். சங்கீதம், எழுத்து... இவைகளினூடாக ஆத்மாவை அலையவிட்ட கலைஞன் தேறுவ-தெப்போ நெஞ்சே? கண்டு, கேட்டு, உண்டுயிர்த்த இசைஞானத்தைக் கூர்மைப்படுத்தி 'திருக்கோணமலை இசைக் கழகம்' - 'ட்ரிங்கோ ம்யூஸிக் க்ரூப்' என்ற பெயரில் ஒரு இசைப்பாசறையை ஆரம்பித்து வைத்தார்.

இது ஒரு இசையின் இயக்கமாகவே அப்போது திகழ்ந்தது. கண்டிப்பு... இசைப்பில் நேர்மை...ஒத்திகைகளில் ஒத்திசைவு... மேடையில் இசைக்கும் போதில் அனைத்துக் கலைஞர்களும் சீருடை அணிந்திருக்க வேண்டும்... (ஐரோப்பிய பாணியில் வெள்ளை வெளேர் ஆடைகள், களுத்தில் கறுப்புப் பட்டி(போ), கருப்புச் சப்பாத்து...) இவ்வாறாக முதன் முதலில் ஒருங்கமைக்கப்பட்ட இசைக்குழு இதுவே. இந்திய சினிமாப் பாடல்கள்... ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கும் தருணங்களில் கூடவே அண்ணன் இசையமைத்த பல பாடல்களும் அரங்கேறின. 'நாமார்க்கும் குடியல்லோம்...' என்று அப்போதே அண்ணன் விலாசமிட்டார்.

அதில் ஒரு பாடல் "ஓடிவரும் மேகங்களே...



பாடிவரும் ராகங்களே..." என்ற பாடல். இந்தப்பாடல் திருக்கோணமலையின் எல்லையைத் தாண்ட அப்போது இணைய-தளங்கள் இல்லை! இசையமைப்பாளர் வி. குமார் அற்புதமான இசையமைப்பாளர். எப்படியோ "காதோடு தான் நான் பேசுவேன்..." என்று விழுந்து விட்டது. எல்லாமே ஒரு உயர்ந்த கலைஞர்களிடமிருக்கும் சமமான அதிர்வெண்களே!

"தழுவியபடியே இருந்தால் பொழுதும் விடிவது தெரியாது." தர்பாரி கானடா ராகத்தில் அமைந்த இந்த மெட்டுக்கு வரிகள் தந்தவன் இன்னுமொரு காணாதே போன பாடலாசிரியன் சண்முகப்ரியா. 'தென்றலும் புயலும்' திரைப்படத்தின் அத்தனை பாடல்களையும் எழுதியவன். அண்ணனின் நம்பிக்கையைச் சம்பாதித்தவன். மிகுந்த கூச்ச சுபாவமுள்ளவன். அன்புவழிபுரத்திலிருந்து தினமும் காலையில் அண்ணன் வீட்டுக்கு துவிச்சக்கர வண்டியில் வருவான். "சந்ர வதனத்தில் இந்ர நீலப் பூ... என் மனதினில் தாவி சிரிப்பதென்ன தேவி..." இந்த வரிகளுக்குச் சொந்தக்காரன். அண்ணன் குளித்து முடித்து வரும்வரை அவர் தாயாருடன் பேசிக்கொண்டிருப்பான்.

இவரது தம்பி பாக்கியநாதன், இம்மானு-வேல், துரை. துரைலிங்கம், கனக. சடாட்சரம், முத்து. சிவராஜா, ஏ.ஜே. பொஸ்கோ, பரமேசுவரன் என்கிற பரமேஸ், குரு ஆர்த்தர் ஸாம்ஸன், அசப்பில் சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் பாலசிங்கம்... 'நித்தம் நித்தம் மாறுகின்றதெத்தனையோ...' திருக்கோணமலை இசைக்கழகம் இன்னும் பல பதிவேறாத கலைஞர்களுடன் புகழ்பெற்று வளர்ந்தது. 'நெஞ்சில் நினைப்பதிலே நடப்பது தான் எத்தனையோ...' அந்த சுபமுகூர்த்தத்தில் 1968ம் ஆண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாடகர் ரகுநாதன் (தற்போது 'பாரீஸில்' நாடக முயற்சி களை மேற்கொண்டு வருபவர்) 'நிர்மலா' என்கிற திரைப்படத்தைத் தயாரிக்க முனைந்தார்.

ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களை... அவர் தம் திறன்களை ஒன்றிணைத்து ஒரு படைப்பைத் தரவேண்டும் என்று இந்த மனிதருக்கு இருந்த பரந்த நோக்கில்... மன்னாரைச் சேர்ந்த கஃபூர் ஒளிப்பதிவு செய்ய, திருக்கோணமலை பத்மநாதன் இசையமைக்க, மட்டக்களப்பைச் சேர்ந்த நடிகர் கதாநாயகனாக, மலையகத்தைத் தாயகமாகக் கொண்டவர் கதாநாயகியாக... இப்படியாகப் பட்டியல் தொடர்கிறது. கொழும்பில் இருந்துகொண்டு இலங்கை வானொலியை ஆக்கிரமித்து... நாடளாவிய திறமைகளை வெளிவர விடாமல் உடுக்கடித்து மலையேற்றிக் கொண்டிருந்த முத்துசாமி, ரொக்சாமி... போன்றவர்களை 'ஆளை விடுறா...சாமி...' என்று ஓரங்கட்டிய 'கண்மணி ஆடவா... காதலை சூடவா...'என்ற மட்டுநகர் லோப்பஸ் பாடிய பாடல் ஈழத்துத் துள்ளிசைப் பாடல்களுக்கு அச்சாரம் போட்டது.

அதன்பின்பு ஒருசில வருடங்கள் கழித்து... அப்போது தமிழ் நாட்டில் புகழ் பெற்றிருந்த இயக்குனர் ஸ்ரீதர் அவர்களுக்கு எடுக்கப்பட்ட விழாவில்... அழைப்பின் பேரில் 'நிர்மலா' தயாரிப்பாளர் ரகுநாதன் சென்னை சென்றிருந்தார். அந்த விழாவில் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விச்வநாதன் அவர்களும் கலந்து கொண்டிருந்தார். அறிமுகங்கள் தொடர்ந்தன.

"இவர் இலங்கையைச் சேர்ந்தவர்... ஒரு திரைப்படத் தயாரிப்பாளர்... நடிகர்..."

"அட... அப்படியா... என்ன படம் பண்ணீங்க?"

"நிர்மலா"

உடனே மெல்லிசை மன்னர் பாட ஆரம்பித்துவிட்டார்... 'கண்மணீ... ஆடவா...' இது போதும். வஸிஷ்டரின் வாயால் ப்ரஹ்மரிஷி என்று பட்டம் பெற!

'எனக்கு நீந்தத் தெரியும்... குத்துக் கரணம் போடுவேன்...' என்று தம்பட்டம் அடிக்காமல் குடத்தில் இட்ட விளக்காகத்திகழ்ந்தவர் அண்ணன் பத்மநாதன். சென்னையில் மார்கழி மாத இசைவிழாக் காலங்களில் நான், வயலின் ஆசான் சங்கரலிங்கம் ஐயா, முத்து. சிவராஜா எல்லோரும் அண்ணன் வீட்டிலிருந்து இரவிரவாக வானொலியினூடாக இசைவிழாக் கச்சேரிகள் கேட்டு... அனுபவித்து... விமர்சித்து... உண்டு...உயிர்த்து... உயிர்ப்போடு வாழ்ந்த காலங்கள் இனி வாரா!

சித்தார் மேதை ரவிஷங்கரின் பக்தனாகிய இவர் ஒரு சிங்கள சித்தார் வாத்தியக் கலைஞரிடம் முறையாகப் பயின்றுகொண்டிருந்த காலத்தில் திருக்கோணமலையைச் சேர்ந்த மருத்துவர் வேதநாயகம் அவர்கள் 'தென்றலும் புயலும்' என்ற திரைப் படத்தைத் தயாரிக்க முன்வந்தார். என்னே... அன்னாரது துணிச்சல். எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில்...? ஊருக்குள் பரபரப்பு! இருந்தாலும் வேதநாயகம் ஏறினார். சிவபாதவிருதையர், சித்தி அமரசிங்கம் உட்பட வடகிழக்கின் கலைஞர்கள் பங்கேற்றனர். அண்ணன் இசையமைத்தார். அத்தனையும் அற்புதமான பாட்டுக்கள். அத்தனை பாடல்வரிகளும் காணாமல் போன கவிஞன் ஷண்முகப்ரியா!

எனக்கும் ஒரு பாட்டு தந்திருக்கலாம்... இதில் என்ன ஒரு சிக்கல் என்றால்...வெற்றிலையை மென்று...விரல்களைச் சொடுக்கிக் கொண்டு அண்ணன் சித்தார் வாசிக்கும் போதில் தினமும் அருகிருந்து அனுபவித்தவன் நான். அவர் முன்னால் வாய் திறந்து பாடக் கூச்சம்! அவர் சித்தார் வாசிக்கும் போதில் ஒரு ஸ்வரம் பிசகினால் அவரே நெற்றிப்பொட்டில் அடித்து விட்டு வாத்தியத்தைக் கீழேவைத்து...விட்டத்தைப் பார்த்தவாறு இருப்பார். இதற்கு மேல் நானாவது... பாடுவதாவது? எப்படியோ...அண்ணன் இன்று இல்லை. ஆயினும் எனக்குள் ஒரு பெருமை இருக்கிறது. அண்ணனின் நிறைவேறாத முதற் காதலுக்கு அஞ்சல் வினியோகம் செய்தவனாக இருந்திருக்கிறேன்.

இப்பேர்ப்பட்ட தன்னை விற்கத் தெரியாத தன்மானமுள்ள கலைஞரிடம் நான் என்னை ஆயுள் காப்புறுதி செய்துகொண்டேன்... இதுவே போதும். அண்ணனின் ஆத்மா
அமைதி பெறும்



anandprasad@thaiveedu.com